

திருச்சி மண்ணச்சநல்லூரில் உள்ள சட்டமன்ற அலுவலகத்தில் பேராசிரியர் அவர்களின் 4–ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு கதிரவன் எம்.எல்.ஏ., கே.என்.அருண் நேரு ஆகியோர் மலரஞ்சலி செலுத்தி மரியாதை செய்தனர். நிகழ்ச்சியில் கழக நிர்வாகிகள் அவைத் தலைவர் அம்பிகாபதி, ஒன்றிய செயலாளர்கள் ராமச்சந்திரன், இளங்கோவன், வழக்கறிஞர் செந்தில் குமார், நாமக்கல் துரை, சீனிவாச பெருமாள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கோடை விடுமுறை:

# தமிழ்நாடு சுற்றுலாக் கழகம் சிறப்பான ஏற்பாடு!

### சுற்றுலாப் பயணிகளுக்கு அமைச்சர் கா.இராமச்சந்திரன் வேண்டுகோள்!

சென்னை, மார்ச் 9-

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுலா பயணத்திட்டங்களில் முன்பதிவு செய்து, வருகின்ற கோடை விடுமுறையில் மலைவாழிடங்களுக்கும், பிற பகுதிகளுக்கும் சுற்றுலா மேற்கொண்டு பயன்பெற வேண்டும் - பொதுமக்களுக்கு சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.



சென்னை, வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் சுற்றுலா வளாக கூட்டரங்கில் சுற்றுலாத் துறையின் மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் குறித்த சுற்றுலாத்துறை அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலர்களுக்கான ஆய்வுக் கூட்டம் சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பல்வேறு சுற்றுலா வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்து சுற்றுலா ஆணையர் மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக மேலாண்மை இயக்குநர் சி.சமயமூர்த்தி முன்னிலையில் சுற்றுலாத் துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் ஆய்வு மேற்கொண்டார்.

வருகின்ற கோடைகாலத்தில் தமிழ்நாடு முழுவதும் உள்ள சுற்றுலாத்தலங்களுக்கு பொதுமக்கள் வருகைதந்து மகிழ்ச்சியாக சுற்றுலா மேற்கொள்ள மாவட்ட சுற்றுலா அலுவலர்கள் பிறதுறை அலுவலர்களுடன் இணைந்து முன்னேற்பாட்டு பணிகளை மேற்கொள்ள வேண்டும். குறைந்த செலவில் சுற்றுலா பயணிகளுக்கு தங்கும் வசதி அளிக்கும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக தமிழ்நாடு ஓட்டல் தங்கும் விடுதிகளின் அறைகளை பொதுமக்கள் முழுமையாக பயன்படுத்திக் கொள்ளும் வகையில் தேவையான முன்னேற்பாடு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என அறிவுருத்தினார்.

இக்கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் பேசுகையில் தெரிவித்ததாவது

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நடவடிக்கைகளால் இந்தியாவிலேயே தமிழ்நாடு அதிக அளவில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலா பயணிகளை ஈர்க்கும் முன்னணி சுற்றுலாத் தலமாக முன்னேறி உள்ளது.

சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் ஊட்டி, கொடைக்கானல் ஆகிய மலைவாழிடங்களுக்கு சுற்றுலா பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும் திருப்பதி, சென்னை-மாமல்லபுரம், காஞ்சிபுரம்- மாமல்லபுரம், திருவண்ணாமலை, ஸ்ரீபுரம் தங்க கோவில், புதுச்சேரி, என ஒரு நாள் சுற்றுலா, மைசூர்-பெங்களூர், குற்றாலம், நவக்கிரக கோவில்கள் தொகுப்பு மற்றும் மூணார் என மூன்று நாட்கள் செல்லும் சுற்றுலா, அறுபடை வீடு முருகன் கோவில்கள் செல்லும் நான்கு நாட்கள் சுற்றுலா, எட்டு நாட்கள் பயணம் செய்யும் தமிழ்நாடு சுற்றுலா, கோவா-மந்த்ராலயம் சுற்றுலா பயண திட்டங்களும். 14 நாட்கள் பயணம் செய்யும் தென்னிந்திய சுற்றுலா, யுனெஸ்கோ நிறுவனத்தால் அங்கீகரிக்கப்பட்ட பழமையான பண்பாட்டு சின்னங்களை பார்வையிடும் சுற்றுலா பயண திட்டம் உள்ளிட்ட பல்வேறு வகையான சுற்றுலா பயண திட்டங்கள் பொதுமக்களின் வசதிக்காக செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

வருகின்ற கோடை விடுமுறையில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக சுற்றுலா பயணத்திட்டங்களில் முன்பதிவு செய்து மலைவாழிடங்களுக்கும், பிற பகுதிகளுக்கும் பொது மக்கள் சுற்றுலா மேற்கொண்டு பயன்பெற வேண்டும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகள் தமிழ்நாடு முழுவதும் முக்கிய நகரங்களில் நகரின் மையப்பகுதிகளில் குறிப்பாக பேருந்து நிலையத்தில் இருந்து மிக அருகில் உள்ளன. ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதிகளில் தொடர்ந்து வெவ்வேறு ஊர்களில் 3 நாட்கள் தங்குபவர்கள், ஒரே விடுதியில் 3 நாட்களுக்கு தங்குபவர்கள், மொத்தமாக 5 அறைகள், 10 அறைகள், 20 அறைகள் என முன்பதிவு செய்பவர்கள் ஆகிய நபர்களுக்கு தள்ளுபடி சலுகைகள் வெவ்வேறு சதவீதத்தில் வழங்கப்படுகின்றன.

மேலும் மூத்த குடிமக்கள், போர் விதவைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கு தள்ளுபடி சலுகைகள் வழங்கப்படுகின்றன. ஒரு நபர் இந்த தள்ளுபடி சலுகைகளில் ஏதேனும் ஒன்றை மட்டுமே பெற இயலும்.

தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் பயணத் திட்டங்கள் மற்றும் ஓட்டல் தமிழ்நாடு தங்கும் விடுதி அறைகளை முன்பதிவு செய்ய தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் www.ttdconline.com என்ற இணைதள பக்கத்தில் தங்களது செல்போன் அல்லது கணினி மூலமாக முன்பதிவு செய்தோ, அல்லது சென்னை வாலாஜா சாலையில் செயல்பட்டு வரும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் தலைமை அலுவலகமான சுற்றுலா வளாகத்திற்கு நேரில் வருகை தந்தோ முன்பதிவு செய்யலாம்.

மேலும் விவரங்களுக்கு தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக கட்டணமில்லா தொலைபேசி எண் 18004253111 மற்றும் 044-25333333, 044-25333444 ஆகிய தொலைபேசி எண்களை தொடர்பு கொண்டும், வலைதள முகவரி www.ttdconline.com மூலமாகவும் விவரங்களை பெறலாம் என்று சுற்றுலாத்துறை அமைச்சர் பொதுமக்களுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

இக்கூட்டத்தில் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக பொதுமேலாளர் திருமதி.இ.கமலா, சுற்றுலாத்துறை இணை இயக்குநர் புஷ்பராஜ் உள்பட சுற்றுலாத்துறை மற்றும் தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக்கழக அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



புதுச்சேரி முத்தியால்பேட்டை சோலை நகரில் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாகி உயிரிழந்த சிறுமியின் உயிரிழப்பிற்கு நீதி வேண்டியும், சிறுமி உயிரிழப்பிற்கு தார்மீகப் பொறுப்பேற்று உள்துறை அமைச்சர் நமச்சிவாயம் பதவி விலகக்கோரியும், சிறுமி உயிரிழப்பிற்கு காரணமாக குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்க வேண்டும், புதுச்சேரியில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருள் நடமாட்டத்தை கட்டுபடுத்தக்கோரியும் இந்தியா கூட்டணி கட்சி சார்பில் கண்டனப் பேரணி நடைபெற்றது. அண்ணா சாலையில் இருந்து தொடங்கிய பேரணி நேரு வீதி வழியாகச் சென்று சட்டமன்றம் அருகில் நிறைவடைந்தது. இந்த பேரணியில் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் இரா. சிவா, முன்னாள் முதல்வர் நாராயணசாமி, காங்கிரஸ் மாநில தலைவர் வைத்தியலிங்கம், திமுக அவைத்தலைவர் எஸ்.பி.சிவக்குமார், திமுக காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர்கள் அனிபால் கென்னடி, செந்தில்குமார், சம்பத், வைத்தியநாதன் உள்ளிட்ட 1000 க்கும் மேற்பட்டோர் பங்கேற்று புதுச்சேரியில் ஆளும் பா.ஜ.க. என்.ஆர்.காங்கிரஸ் அரசுக்கு எதிராகவும், கோரிக்கைகளை வலியுறுத்தியும் கண்டன முழக்கங்களை எழுப்பினர்.



கபிலர்மலை ஒன்றியத்திற்கு உட்பட்ட கபிலர்மலையில் தி.மு.க கட்சி அலுவலகம் கட்டுவதற்கு 1960ஆம் ஆண்டு நிலம் கட்சி சார்பில் வாங்கப்பட்டுள்ளது. அந்த இடத்தில் தற்போது தி.மு.க அலுவலகம் கட்டுவதற்கான அடிக்கல்நாட்டு விழா நடைபெற்றது. நாமக்கல் மேற்கு மாவட்ட செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் தலைமை தாங்கினார். கபிலர்மலை ஒன்றியச் செயலாளர் கே.கே.சண்முகம் அனைவரையும் வரவேற்று பேசினார். மாநில வர்த்தகர் அணி துணை தலைவர் கே.எஸ்.மூர்த்தி வாழ்த்தி பேசினார். வனத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் அலுவலக கட்டடம் கட்ட அடிக்கல் நாட்டி பேசினார். விழாவில் பரமத்தி ஒன்றியச் செயலாளர் தனராசு, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வடிவேல் உள்ளாட்சி பிரதிநிதிகள், துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். முடிவில் கிளைக்கழக செயலாளர் கோபால் நன்றி கூறினார்.

# முதல்வர் உருவில் சேகுவேரா வாழ்கிறார்!



கடந்த நூற்றாண்டில் கியூபாவின் விடுதலைக்கு வித்திட்ட புரட்சியாளர்களில் முதன்மையாளராக உலக இளைஞர்களால் இன்றளவும் போற்றப்படும் தன்னலமில்லா தகைமையாளர் சேகுவேரா அமெரிக்க ஏகாதிபத்தியத்தினை அடக்கப் பிறந்த அரிமா. அவர் ஒரு கையில் துப்பாக்கியும் ஒரு கையில் ஸ்டெதாஸ்கோப்பையும் வைத்திருந்தவர். அவர் கியூபாவில் ஆட்சி அமைத்த பின் பிடல் காஸ்ட்ரோவிடம் கேட்டது, அனைவருக்கும் கல்வி தர வேண்டும் என்பதுதான்.

அதேபோல் பிரெஞ்ச் புரட்சிக்கு வித்திட்ட வித்தகர்கள் வால்டேர் மற்றும் ரூசோ. வால்டேருக்கு, சற்று காலம் தள்ளிப் பிறந்தாலும் எழுத்துக்காக ரூசோவைப் போற்றியவர் வால்டேர். ரூசோவின் ‘சமுதாய ஒப்பந்தம்’ புகழ் பெற்ற புத்தகம் என்றாலும் அவர் எழுதிய எமிலி என்கிற புத்தகம் தான் கல்வியின் அவசியத்தைப் புரிய வைத்து கற்றோரை அதிகமாக்கி முடியாட்சிக்கு முடிவுரை எழுதியது.


சேகுவேரா காலத்தால் ரூசோவிற்கு வெகுகாலம் பிறகு பிறந்திருந்தாலும் இங்கும் நம் தமிழ் மண்ணிலும் அவரை நேசிக்கும் நெஞ்சங்கள் அதிகம். அவரைப் போல் தான் இன்று கழகத் தலைவர் கடுஞ்சொல் அறியா கண்ணியவான், தமிழினம் கல்வியில் சிறந்து விளங்க கல்விக்காக நிதிநிலை அறிக்கையில் சுமார் 52,000 கோடி வழங்கியுள்ளார். ஆதிக்கவாத ஒன்றிய அரசு அள்ளித் தர வேண்டாம்; கிள்ளிக் கூட தர வேண்டிய நிதியை தராத போதும் ஒரு கரத்தில் கல்வி; மறுகரத்தில் சமூகநீதி என எடுத்து இன்று தமிழ் மண்ணின் உரிமை காக்கும் சேகுவேராவாக திகழ்ந்து நல்லாட்சி நல்கி வருகிறார் கழகத் தலைவர். சர்வாதிகாரி பாடிஸ்டாவை எப்படி சேகுவேரா வீழ்த்தினாரோ அதைப்போல் சர்வாதிகார போக்கோடு ஆளும் பிரதமர் மோடியை வீழ்த்தப் போகிறார் நம் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

அனைத்து மக்களும் அகம் மகிழ்ந்து வாழ்த்திட அகிலத்திற்கே வழிகாட்டும் அற்புதமான அதே வேளையில் அறிவு சார்ந்த நிதிநிலை அறிக்கையினை அழகு தமிழ் மணக்க தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் உழைப்பால் உயர்ந்த மகுடம் சிரம் இருக்கும் போதும் மமதை சிறிதுமில்லா முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலோடு நிதியமைச்சர் தங்கம் தென்னரசு தமிழ்நாட்டிற்கு தந்துள்ளார்.

‘கற்றிடுக! கற்றிடுக! கற்றிடுக!’ என்ற மாவீரர் சோவியத் நாட்டை உருவாக்கிய புரட்சியாளர் லெனின் கூறியதைப் போல் ‘கேட்டிடுக! கேட்டிடுக! கேட்டிடுக!’ என்று தேனமுதே செவிகளில் சேர்ந்திடும் வண்ணம் நிதிநிலை அறிக்கை படிக்கத் தொடங்கிய நிமிடம் முதல் அடுத்த வரி என்ன; அதில் வரும் தித்திக்கும் செய்தி என்ன என்று சட்டமன்ற உறுப்பினர்கள் ஆவலுடன் கேட்கும் வண்ணம் அருஞ்சுவையாய் அமைந்ததுதான் கழகத் தலைவர் அவர்களின் கருத்துமிகு நிதிநிலை அறிக்கை. எதை விடுவது? எதை எழுதுவது? எதில் தொடங்குவது? எதில் முடிப்பது? அத்தனையும் நற்சுவை மிக்க நல்அறிவிப்புகள்.

‘எனக்கு ஆடம்பரம் தெரியாது! அடாவடி தெரியாது! ஆர்ப்பாட்ட அரசியல் தெரியாது! அடுக்கு மொழியில் அன்னைத் தமிழைப் பேசத் தெரியாது!’ என்ற அவர்தான் ஆளுமையில் சிங்கம் என்று தமிழ்நாட்டு மக்கள் வாழ்த்தும் வண்ணம் ஆளும் நம் முதல்வர் அவர்களின் ஆற்றலின் வெளிப்பாடே இந்த நிதிநிலை அறிக்கை.

ஆரம்பமே முன்னோர்களை மதிக்கும் முத்தாய்ப்பான நினைவுகூரல்கள். ஆம்! திருவள்ளுவர், பி.டி.தியாகராயர், பென்னிகுயிக், பனகல் அரசர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், பெருந்தலைவர் காமராஜர், எம்.ஜி.ஆர், நீதிக் கட்சி, தி.மு.க, திராவிட மாடல் அரசு என்று அனைவரின் மற்றும் அனைத்தின் சிறப்பு களை கூறிய பாங்கு திருக்குவளை முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் தனிச் சிறப்பு.



**வி.பி. கலைராஜன்**
கழக இலக்கிய அணிச் செயலாளர்

எதிர்காலத் தலைமுறையினரின் இனிய வாழ்வை எண்ணத்தில் கொண்டு எழுத்தோவியமாய் எத்தனை திட்டங்கள். பெண்களுக்கு சொத்தில் சமபங்கு என்றார் 1929ல் தந்தை பெரியார். அதை நிறைவேற்றிக் காட்டினார் 1989ல் முத்தமிழறிஞர் கலைஞர். பெண் கல்வி அவசியம் என்றார் தந்தை பெரியார். அதற்காக மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் பெயரில் புதுமைப்பெண் திட்டம் மூலம் 2,73,000 மாணவியர்களுக்கு கல்லூரிக் கல்வி பயில வழிவகுக்கும் வண்ணம் மாதந்தோறும் ஆயிரம் ரூபாய் தந்து பெண் கல்வியை ஊக்குவித்தார் முதல்வர் தளபதியார் அவர்கள்.

அதனால் நடப்பு ஆண்டில் உயர்கல்வி பயில வந்த மாணவிகள் எண்ணிக்கை 34 விழுக்காடு அதிகரித்துள்ளது. அதாவது 34,460 மாணவிகள் கூடுதலாக சேர்ந்துள்ளனர். தற்போது இந்தப் புதுமைப் பெண் திட்டத்தில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் தமிழில் படிக்கும் மாணவிகளும் பயன் பெறும் வகையில் விரிவு படுத்தப்படும் என்று அறிவித்து அதற்காக 370 கோடி ரூபாய் ஒதுக்கி கல்லூரி கல்வி ஏழை மாணவிகளுக்கு இனி கனவல்ல அதை நனவாக்கி காட்டுகிறேன் என்று செய்துள்ளார் கழகத் தலைவர் முதல்வர் அவர்கள்.

மாணவிகளுக்கு மட்டும் கொடுத்தால் போதுமா? பள்ளிப் படிப்பை முடித்து குடும்பச் சுமையை ஏற்று உயிர்கல்வி பயில பணமின்றி வேலைக்குச் செல்லும் மாணவர்களின் நிலை அறிந்து குழந்தைத் தொழிலாளர்கள் என்பதையே ஒழிக்கும் வண்ணம் கல்விக்கு பணம் தடையா! ஒருபோதும் இருக்க விடேன் என்று தமிழ்ப் புதல்வன் என்ற புதிய திட்டம் அறிவித்து அதன் மூலம் அரசுப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் கல்லூரி கல்வி பெற மாதம் ரூபாய் 1000 வழங்கப்படும் என்று அறிவித்துள்ளதால் மூன்று லட்சம் மாணவர்கள் பயனடைவர். இதற்காக 360 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார் நம் முதல்வர் அவர்கள். அதே வேளையில் பெற்றோருக்கு நிதிச்சுமையைத் தந்திடாமல் மாணவ கண்மணிகள் உயர்கல்வி பயின்றிட 2024-25 ஆம் ஆண்டில் மட்டும் 2500 கோடி வங்கி மூலம் கடன் பெறவும் வழிவகை செய்யப்பட்டுள்ளதாக அறிவித்துள்ளார்.

1921 ஆம் ஆண்டு மாணவர்கள் பசியின்றி பயில வேண்டும் என்பதற்காக ஒரு அணாவிற்கு ஒரு நாளைக்கு முதன்முதலாக ஆயிரம் விளக்கு பள்ளியில் மதிய உணவு வழங்கும் திட்டம் பி.டி.தியாகராயரால் அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் நீட்சியாக காமராஜர் மாநிலம் முழுவதும் மதிய உணவுத் திட்டத்தை விரிவு படுத்தினார். பிறகு அதனையே எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டமென அறிவித்தார். அதனை உண்மையான சத்துணவாக வழங்கிட வாரம் ஐந்து முட்டைகள்; அதை விரும்பாத மாணவர்களுக்கு வாழைப்பழம் வழங்கிட முத்தமிழறிஞர் கலைஞர் உத்தரவிட்டார்.

கலைஞர் அவர்களின் அன்பு மகன் அயராத உழைப்பால் அன்பான மக்களின் ஆதரவோடு முதல்வரான கழகத் தலைவர் இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் காலை உணவாக கஞ்சித் தண்ணீருக்கும் வழியில்லாமல் கல்விச்சாலை வராத மாணவச் செல்வங்களை மனதில் எண்ணி இன்னல் தரும் பசியை இல்லாமல் களைந்திட தந்தையானவராய் திகழ்ந்து காலை உணவுத் திட்டத்தை அறிவித்தார். அதனால் கல்வி கற்க வரும் மாணவர்களின் எண்ணிக்கை கருணை உள்ளம் கொண்ட முதல்வரால் அதிகரித்தது. இனி தமிழ்நாட்டில் கல்வியறியா பிள்ளையே இல்லையெனும் நிலை உருவாகியுள்ளது. “களர் நிலமல்ல தமிழ் நிலம் கல்வி தரும் அருள் நிலம்” என இந்திய நாடே இன்று போற்றுகிறது.

தெலுங்கானாவில் சமீபத்திய தேர்தலுக்கு முன்பு வரை முதல்வராக இருந்த சந்திரசேகர ராவ் இத்திட்டத்தை தொடங்கினார். அதனால் 20 லட்சம் மாணவச் செல்வங்கள் அங்கு பயனடைந்து வருகின்றனர். ஏன்; அமெரிக்காவில் ஒரு மாநிலத்தில் இந்த காலை உணவு திட்டம் தற்போது தொடங்கப்பட்டுள்ள தாக செய்திகள் கூறுகின்றன.

2022-ஆம் ஆண்டு அறிவுலக மேதை அண்ணா அவர்கள் பிறந்தநாளில் இத்திட்டத்தை நம் அறிவுப் பெட்டகம் முதல்வர் மதுரையில் தொடங்கி 2023 ஆம் ஆண்டு மாநிலத்தில் உள்ள 30,992 அரசுப் பள்ளிகளில் ஒன்று முதல் ஐந்தாம் வகுப்பு பயிலும் 15 லட்சம் மாணவ கண்மணிகள் பயனடைந்தனர்.

தற்பொழுது அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் சுமார் மூன்று லட்சம் மாணவர்கள் பயனடையும் வண்ணம் விரிவு படுத்தப்பட்டுள்ளது. வயிற்றுப் பசியை போக்கினால் அறிவுப்பசி தீர்ந்து அறிவாற்றல் வளரும் என்பதை அறிந்து வாழும் வள்ளலாராகத் திகழ்கிறார் ‘மாணவ நேசன்’ இதழை தனது பள்ளிப் படிப்பு காலத்திலேயே தொடங்கிய கலைஞர் அவர்களின் புதல்வர் மாணவ நேச முதல்வராக திகழ்ந்து வருகிறார். இதற்காக 600 கோடி ரூபாய் நிதி ஒதுக்கித் தந்துள்ளார்.

ஐ.ஏ.எஸ், ஐ.பி.எஸ், ஐ.எப்.எஸ் போன்ற ஒன்றிய குடிமைப் பணித் தேர்வுகளில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களின் தேர்வு விகிதம் கடந்த சில ஆண்டுகளாக குறைந்து வருவதைக் கண்டு கவலை கொண்டு இனிவரும் காலங்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் அதிக அளவில் தேர்வு பெற ஆயிரம் மாணவர்களுக்கு முதல்நிலை தேர்வுக்கு தயாராக மாதம் 7500 ரூபாயும் முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெறுவோர்க்கு மாதம் 25 ஆயிரம் ரூபாய் ஊக்கத் தொகையாக வழங்கிட கடந்த ஆண்டு 10 கோடி ஒதுக்கி தந்த நம் முதல்வர், இந்த ஆண்டு மேலும் 6 கோடி ஒதுக்கித் தந்துள்ளார் குணத்தில் சிறந்த குணாளர் திராவிட மாடல் அரசின் சிற்பி தளபதி அவர்கள்.

நாடு போற்றும் நல்ல திட்டம் தான் ‘நான் முதல்வன்’. இத்திட்டத்தின் மூலம் இதுவரை சுமார் 28 லட்சம் மாணவர்கள் பயிற்சி பெற்றுள்ளனர். 18 ஆயிரம் பொறியியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும், 20000 கலை மற்றும் அறிவியல் கல்லூரி ஆசிரியர்களுக்கும் பயிற்சி வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு பயிற்சி பெற்றவர்களில் 1.19 லட்சம் மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர்.

இப்படி மாணவ நலனில் அக்கறை கொண்டு அறிவில் சிறந்தோர்களை உருவாக்க இந்த ஆண்டு அரசு மற்றும் அரசு உதவி பெறும் 100 பொறியியல் மற்றும் கலை அறிவியல் கல்லூரிகளில் 200 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய திறன் பயிற்சிக் கட்டமைப்புகள் உருவாக்கிட அறிவித்துள்ளார்.

உயர் கல்வியில் உச்சநிலையில் இருக்கும் மாநிலமாக தமிழ்நாட்டை உருவாக்கிய உன்னதத் தலைவர் நம் முதல்வர் அவர்கள்தான். கல்லூரிகளில் கட்டடக் கட்டமைப்பு பணிகள் 200 கோடி செலவில் செயல்படுத்தப்படுவதோடு 236 அரசு கல்வி நிறுவனங்களுக்கு கணினி மற்றும் இதர அறிவியல் கருவிகள் 173 கோடி ரூபாயில் வழங்கப்படுவதோடு 45 அரசு பலவகை தொழில் நுட்ப கல்லூரிகளை (பாலிடெக்னிக்) தொழில்துறை 4.0 தரத்திற்கு உயர்த்திட 3014 கோடி ரூபாய் மதிப்பில் புதிய திட்டம் அறிவித்துள்ளார் அதிகாலை ஆதவனாம் நம் முதல்வர்.

அரசுப் பள்ளியில் படித்த மாணவச் செல்வங்களுக்கு தொழில் கல்வி கற்க 7.5 விழுக்காடு உள்ஒதுக்கீடு வழங்கப்பட்டது. அந்த மாணவர்களுக்கான கல்விக் கட்டணம், விடுதிக் கட்டணம், போக்குவரத்துக் கட்டணம் என அனைத்து கல்விச் செலவுகளையும் திராவிட மாடல் அரசு ஏற்றுக் கொண்டது. அப்படி தற்பொழுது படித்து வரும் 28,749 மாணவர்களின் கல்விக் கட்டணத்தையும் அரசே ஏற்பதாக அறிவித்து; வரும் நிதியாண்டில் ரூபாய் 511 கோடி செலவிடப்படுமென கல்வி வள்ளலாகத் திகழ்ந்து வரும் கருணையுள்ளத்துடன் நம் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் அறிஞர் அண்ணா நூலகம் சென்னையில் அமைத்தார். கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை கழகத் தலைவர் தளபதி அவர்கள் மதுரையில் அமைத்தார். இந்த நூலகங்கள் மூலம் ஆண்டுதோறும் பல லட்சம் மாணவர்கள் பயனடைந்து வருகின்றனர். இதனால் தான் தொகுதிகள்தோறும் நூலகங்கள் அமைக்க இளைஞரணிச் செயலாளர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் முயற்சி எடுத்து வருகிறார். திருக்குவளை மரபணு சிறப்பாக மக்களுக்காக உழைக்கும் மரபணுவாகத் திகழ்ந்து வருகிறது என்பது எப்படி நிரூபணம் ஆகிறது பாரீர்! தற்போது மாணவர்களில் இளம் தலைமுறையினரின் எண்ணத்திற்கு ஏற்ப லட்சக்கணக்கான அனைத்துத் துறை நூல்களும் இருக்கும் வண்ணம் கோயம்புத்தூரில் நூலகம் இவ்வாண்டு அமைக்கப்படும் என்றும் நம் முதல்வர் அவர்கள் அறிவித்துள்ளார். இவை கல்விக்கு மட்டுமே! பள்ளி கல்விக்கென்று ரூபாய் 44,042 கோடியும், உயர்கல்வித்துறைக்கென்று 8212 கோடி ரூபாய் ஒதுக்கித் தந்துள்ளார் நம் தமிழ்நாடு முதல்வர்.

“காலை எழுந்தவுடன் கல்வி, மாலை முழுவதும் விளையாட்டு” என்றார் பாரதியார். அதைப்போல் கல்வியோடு சிறந்து விளையாட்டிலும் சாதனை புரிந்திட விளையாட்டுத் துறைக்கென 400 கோடி ஒதுக்கித் தந்துள்ளார் நம் முதல்வர். முதல்வர் அவர்களும் விளையாட்டுத் துறை அமைச்சர் சகோதரர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் காட்டும் அக்கறையாலும், ஊட்டும் ஊக்கத்தாலும் தமிழ்நாட்டு வீரர், வீராங்கனைகள் ஆசிய விளையாட்டில் இதுவரை இல்லாத அளவிற்கு அதிகப் பதக்கங்கள் பெற்றதோடு கேலோ விளையாட்டிலும் அதிகப் பதக்கங்கள் பெற்று இந்தியாவிலேயே இரண்டாம் இடத்தைப் பிடித்து சாதனை புரிந்துள்ளனர்.

அனைவருக்கும் கல்வி தரச் சொன்ன புரட்சியாளர் சேகுவேரா சிறந்த கால்பந்து வீரர். இப்போது புரிகிறதா கல்வி தரும் வள்ளல் தமிழ்நாடு முதல்வர் தளபதி அவர்கள் வடிவில் சேகுவேரா எப்படி வாழ்கிறார் என்பது. நிதிநிலை அறிக்கையில் கல்வித்துறையை மட்டும் தொட்டுத் தந்துள்ளோம் மற்றவைகளையும் பின்பு காண்போம்.

**மாணவச் செல்வங்களே! மாட்சிமை கொள்ளுங்கள்!**
**மன்பதை முதல்வரை மனதில் நிறுத்துங்கள்!**
**நாடாளும் நல்லவரை நாளும் நினையுங்கள்!**
**நாடாளுமன்றத் தேர்தலில் நாற்பதும் தாருங்கள்!**




மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் ஏற்பாட்டில் முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் 71 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு “எல்லோருக்கும் எல்லாம்” பொதுக்கூட்டம் 16 வது வட்டம், மணலி புதுநகரில் நடைபெற்றது. இ.கண்ணப்பன், கா.தாமரைச்செல்வன், கே.கருணாகரன் வி.ஆர்.குப்பன் ஆகியோர் முன்னிலையில் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. தலைமையில் கழக கொள்கைப் பரப்புச் செயலாளர் திண்டுக்கல் ஐ.லியோனி சிறப்புரையாற்றி 1500 பேருக்கு நல உதவிகளை வழங்கினார்.